விலை ரூபா 1–25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 | வைகாசி 4 | ஷஃபா 26 | இதழ் 96
யாழ்ப்பாணம் | வெள்ளிக்கிழமை | 17-5-1985

## "அமைப்புகளிடையே கருத்துவேறுபாடு இல்லை!"

### ஒற்றுமை முயற்சிபற்றி 'உமா' பங்களூரில் தகவல்

(சென்னை)

தனி ஈழம்அமைப்பதற்காகப் போராடிவரும் பல்வேறு அமைப்புகளும் ஒன்றுகி, தனி ஈழம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்று தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத் தலைவர் திரு. உமாமகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இந்திய 'தூர்தர்ஷன்' நேற்றிரவு ஒளிபரப்பிய செய்தியில் மேற்படி விபரம் தெரிவிக்கப்பட்டது.

"சகல அமைப்புக்களும் ஒன்றுகிவரும் அதேநேரத்தில், எங்களுக்குள் கருத்துவேறுபாடுகள் இல்லை" என்றும் திரு. உமாமகேஸ்வரன் தெரிவித்திருப்பதா 'தூர்தர்ஷன்' கூறியது.

பங்களூரில் செய்தியாளர்கள் மத்தியில்தான் மேற்படி கூற்றை வெளியிட்டுள்ளார்.

## 'ரெலோ' மறுக்கிறது

(யாழ்ப்பாணம்)

"14-5-85 அன்று அநுராதபுர சிங்கள மக்களுக்கு எதிராக நடாத்தப்பட்ட தாக்குதல் எம்மால் நடாத்தப்பட்டது என்பதை முற்றாக மறுக்கின்றோம்" என்று 'தமிழ் ஈழ விடுதலை இயக்கம்' (ரெலோ) விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

"இவ்வாறான சாதாரண சிங்கள மக்களுக்கு எதிரான

(6-ம் பக்கம் பார்க்க)

## வர்த்தகர் முருகேசு விடுதலை

(யாழ்ப்பாணம்)

இரு வாரங்களுக்கு முன்னர் கடத்திச் செல்லப்பட்ட வர்த்தகர் எஸ். வி முருகேசு நேற்றிரவு 8 மணியளவில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அதே சமயம் நேற்றுமுன்தினம் இரவு புன்னாலைக்கட்டுவனைச்சேர்ந்த அரிசி ஆலைஉரிமையாளரான எஸ். இராசரத்தினம் என்பவர் கடத்திச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

# கலைஞர்கருணாநிதிகைது!

# 15 நாள் விளக்கமறியல்!

(காஞ்சிபுரம்)

**தி. மு. க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி நேற்று காஞ்சிபுரத்தில் கைது செய்யப்பட்டார்! இவருடன் முன்னாள் அமைச்சர் திரு. சி. வி. எம். அண்ணாமலை, முன்னாள் எம். பி. திரு. எஸ் தண்டபாணி உட்பட மொத்தம் இருநூற்று நாற்பத்து ஆறு தொண்டர்கள் நேற்று கைதுசெய்யப்பட்டனர்!**

இலங்கைத் தமிழருக்கு ஆதரவு தெரிவித்தும், இலங்கைத் தமிழர் பிரச்னையில் இந்திய மத்திய அரசாங்கத்தின் அசமந்தப் போக்கைக் கண்டித்தும் தி. மு. கழகம் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் தொடர்ச்சியாக அரசு அலுவலகங்கள் முன்பாக மறியல் போராட்டம் நடத்திவருவது தெரிந்ததே.

கடந்தமாதம் இருபத்து மூன்றாம் திகதி ஆரம்பித்த மறியல் போராட்டத்தில் இதுவரை நாலாயிரத்துக்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தி மு க. தலைவர் திரு மு. கருணாநிதி நேற்று காஞ்சிபுரத்திலிருந்து சென்னைக்கு அழைத்துச்செல்லப்பட்டு பதினைந்து நாள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## 8 சடலங்கள் வவனியா ஆஸ்பத்திரியில்

(அநுராதபுரம்)

அநுராதபுரம் புகையிரதப் பகுதியில் பலியான எட்டு தமிழ் ஊழியர்களின் சடலங்களும் வவனியா ஆஸ்பத்திரி பிரேதச் சாலையில் வைக்கப்பட்டுள்ளன.

அமைச்சர்கள் திரு. லலித் அத்துலத்முதலி, திரு. எஸ். தொண்டமான், திரு. செ. இராசதுரை, ஜனாப் எம். எச். மொகமட், ரயில்வே பொது முகாமையாளர் மற்றும் வவனியா, அநுராதபுரம அரசஅதிபர்கள் ஆகியோருடன் யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் தொடர்பு கொண்டு, மேற்கொண்ட

(5ம் பக்கம் பார்க்க)

## லண்டன் ஏடு தகவல்

(லண்டன்)

அநுராதபுரத்தில் பெரும்பான்மையினரால் நகரைவிட்டு வெளியேறுமாறு வற்புறுத்தப்

6-ம் பக்கம் பார்க்க)

### பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

## முகாம்மீது தாக்குதல்; 18 தீவிரவாதிகள் பலி!

(மட்டக்களப்பு)

அக்கரைப் பற்றில் பதினெட்டு தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

தீவிரவாதிகளின் முகாம் ஒன்றை பொலிஸ் வசேட அதிரடிப்படையினர் கண்டுபிடித்து தாக்குதல் நடத்திய போதே இந்த தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் அங்

(6-ம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் நடந்த ஹர்த்தால்

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் வர்த்தகர்கள் கடத்தப்படுவதை எதிர்த்தும், கடத்தப்பட்ட வர்த்தகர்களை எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலை செய்யுமாறு கோரியும் யாழ் நகரில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கடபட்டது.

யாழ் நகரிலுள்ள வர்த்தக நிலையங்கள், கடைகள் யாவும் பூட்டப்பட்டிருந்தது. மக்கள் நடமாட்டம் குறைவாகக்

(6ம் பக்கம் பார்க்க)

## தென்பகுதி தமிழ் ஊழியருக்கு பாதுகாப்பு அளிக்குக!

### ஜனாதிபதிக்கு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தென்பகுதியில் பணியாற்றும் அரச ஊழியர்களுக்கு உயிர் பாதுகாப்பு அளிக்குமாறு பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக்குழு ஜனாதிபதியிடம் கோரியுள்ளது.

ஜனாதிபதிக்கு இணைப்புக்குழு அனுப்பியுள்ள அவசரத் தந்தியில் கூறப்பட்டிருப்பதாவது:

"அநுராதபுரத்தில் ஏற்பட்ட அசம்பாவிதங்களின் பின்னர் தென் பகுதிகளில் பணியாற்றும் அரச, கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு பீதியும், பயமும்ஏற்பட்டிருப்பதோடு உயிர் ஆபத்து ஏற்படும் என்ற ஐயப்

(6-ம் பக்கம் பார்க்க)

### ● பிரேதச்சாலையில் 31 சடலங்கள்!

## மரணவீடாக மாறிய யாழ் ஆஸ்பத்திரி!

### எங்கும் அழுகுரல்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு - குறிகாட்டுவான் படகில் கொலை செய்யப்பட்ட பிரயாணிகளின் 31 சடலங்களும் நேற்று நண்பகல் புங்குடுதீவு ஆஸ்பத்திரியிலிருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு லொறியில் கொண்டு வரப்பட்டன.

நேற்றுக்காலை தொடக்கம் சடலங்கள் வருவதை எதிர்பார்த்து பல நூற்றுக் கணக்கான மக்கள் குழுமி நின்றார்கள்.

எல்லோரும் கண்ணீரும் கம்பலையுமாகவே காட்சி அளித்தார்கள் பலர் கதறி அழுது சொண்டிருந்தார்கள். யாழ் ஆஸ்பத்திரி ஒரு மரண

(6-ம் பக்கம் பார்க்க)

### படகுச் சம்பவம்:

## விசாரணைக்கு லலித் உத்தரவு

(கொழும்பு)

நெடுந்தீவு படகுச் சம்பவம் குறித்து உடன் விசாரணை மேற்கொள்ளுமாறு அமைச்சர் லலித் அத்துலத்முதலி உத்தரவிட்டுள்ளார்.

## துப்பாக்கிச் சூட்டுக்குப் பலி

(திருகோணமலை)

நேற்றுமுன்தினமிரவு ஊரடங்குச் சட்டநேரம் வீதியில் சென்றுகொண்டிருந்த மூவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்கள்.

திருமலை மாநகர சபையின் ஐ தே. கட்சி முன்னாள் உறுப்பினர் த. மாணிக்கவாசகர், பொலிஸ் கான்ஸ்டபிள் எஸ். நகுலேஸ்வரன், எஸ். துரைரத்தினம ஆகிய மூவருமே மரணமானவர்களாவர். (ம)

## "எனது கணவன் அப்பாவி; அவரைகொன்றுவிட்டார்கள்!"

### பாதுகாப்பு ஊழியர் மனைவி சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

"நியாயம் நீதியில்லாமல் ஒருவித குற்றமும் செய்யாத அப்பாவியான எனது கணவனை, எங்கள் வீட்டு வளவுக்குள் புகுந்து, சீருடை அணிந்தவர்கள் சுட்டுக்கொன்றுவிட்டார்கள்."

யாழ். கச்சேரி நல்லூர் வீதியைச் சேர்ந்த இலங்கை வங்கி யாழ். கிளை பாதுகாப்பு ஊழியர் சபாரத்தினம் சிவபாலனின் 34-வயது) மரணவிசாரணையில் சாட்சியமளித்த அவரது மனைவி விஜயராணி (24-வயது) மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். உத்தியோகப்பற்றற்ற நீதவான் ஏ. அன்ரனி மரணவிசாரணை நடத்தினார்.

விஜயராணி மேலும் கூறியதாவது "சம்பவதினம் இரவு

(6-ம் பக்கம் பார்க்க)

## வில்பத்து வனவிலங்கு பகுதியில் தேடுதல்வேட்டை

(கொழும்பு)

அநுராதபுரம் சம்பவத்துக்குக் காரணமானவர்களைக் கண்டுபிடிப்பதில் இராணுவம், கடற்படை, விமானப்படை, ஆகிய முப்படையினரும் ஒன்றிணைந்து தீவிர தேடுதலை மேற்கொண்டு வருகின்றனர்.

வில்பத்துவனவிலங்குப்பகுதி

(6-ம் பக்கம் பார்க்க)

## அந்த 27 சடலங்கள் தகனம் செய்யப்பட்டன

(கொழும்பு)

அடையாளம் காணப்படாத இருபத்தேழு சடலங்கள் அநுராதபுரம் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது

இந்தச் சடலங்கள் அடையாளம் காணப்பட்டு வியாழக்கிழமை (நேற்று) மாலைக்குள் உறவினர்கள் எடுத்துச்செல்லாவிட்டால் அரசாங்க செலவில் இறுதிச் சடங்குகள் செய்யப்பட்டு பூதவுடல்கள் தகனம் செய்யப்படும் என்றும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

நேற்றிரவு எமக்குக் கடைசியாகக் கிடைத்த தகவலின்படி இந்தச் சடலங்கள் யாவும் தகனம் செய்யப்பட்டுவிட்டதாக தெரியவந்துள்ளது. (ரா)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

அப்பளம், தோசை, தயாரிப்பதற்கேற்ற உழுந்து மா (OridFlour) கிலோ ரூபா 20/-க்கு பெற்றுக் கொள்ளலாம் M G M Stores 777, காங்கேசன்துறை வீதி, and 208, முதலாம்குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22611 [2820]

பிளிச்சிங் பவுடர், கமெக்சின் பவுடர், கிளீனிங் பவுடர், 'கிளீன்ஆல்' மருந்து இவற்றை பாவனையாளர்கள் சகல விநியோகஸ்தர்களிடமும் பெற்றுக் கொள்ளலாம். S.மகாதேவன், ஜயந்தி என்றபிறைஸஸ், ஆவரங்கால், புத்தூர். 3298

வீட்டுத் தளபாடங்கள் மற்றும் படுக்கை விரிப்புகள் வேறும் பொருட்கள் விற்பனைக்குண்டு. 'சென்றல் கிளினிக்' நெல்லியடி, கரவெட்டி. 3297

நல்லநிலையிலுள்ள E L.F.150 பிரயாணி மினி வானும் A 50 கேம்பிறிஜ் காரும் விலைமலிவு. விற்பனைக்குண்டு உடன்நேரில் தொடர்பு கொள்ளவும். அ. அன்ரன், நித்திய கல்யாணி ஜுவல்லறி, 162, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 3289

தாளையடியில் ரோட்டுக்கருகாமையில் செட்டியார் வீடும் வளவும் 4 பரப்பு உடன் விற்பனைக்கு. திருமதி S மத்தியூஸ், 16, கொன்வென்ற் ரோட், யாழ்ப்பாணம். 3244

## தேவை

நல்லொழுக்கமும் பண்பாடுமுள்ள 68 வயது இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தருக்கு யாழ் - டவுன், சுண்டிக்குளி, நல்லூர் சுற்றாடலில் தங்குவதற்கு ஒரு அறை (with Attached Bath and Lavatory) உடன் தேவை. காலை மாலை சாப்பாடு விரும்பத்தக்கது. விளம்பர இல: 3240. மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 3240

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

(இல 84அ- பிரிவுகள் 524,532)

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

கோப்பாய் தெற்கு, கோப்பாய் என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லத்துரை சண்முகநாதன் பெண் சிவமணி என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

— மரணமெய்தியவர்

உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய், சதாசிவம் செல்வரத்தினம்.

— மனுதார்.

மரண சாதன நியாயாதிக்கம் } இல.T / 3767

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரும் 1985-ம் ஆண்டு வைகாசி மாதம் 31ந் ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன தாக்கப்படலாகா தென்பதற்கு காரணங் காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி

மு. அ. மக்பூல்,
பதில் பதிவாளர்.

என்னால் வரையப்பட்டது.
ஒப்பம்
க. கேசவன்,
மனுதாரின் சட்டத்தரணி.

1985-ஆம் ஆண்டு 3ம் மாதம் 27-ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

3294

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மாவட்ட நீதிமன்றம் மல்லாகம்

இளவாலை என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற நடராசா கைம்பெண் வள்ளிப்பிள்ளை என்பவரின் மரண சாதன மற்ற மரணச்சொத்துக்களின் விடயத்தில்

-மரணமெய்தியவர்.

மரணசாதன நியாயாதிக்கம் இல : ரி/215

நடராசா அருந்தவராசா, ''ராணி மகால்'' இளவாலை வடக்கு, இளவாலை.

- மனுதார்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985 ம் ஆண்டு தை மாதம் 23ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன கட்டளையாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1985 ம் ஆண்டு தை மாதம் 18 ம் திகதி

நீதிமன்றக் கட்டளைப்படி
ஆழ்வார்சிவபாதசுந்தரம்,
பதிவாளர்

தயாரித்தவர்:
சிவ. சிறிதரன்,
மனுதாரின் சட்டத்தரணி.

காரணம் காட்டும் திகதி 17-7-85 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஆழ்வார் சிவபாதசுந்தரம்,
3300 பதிவாளர்.

## நெடுங்கேணி மின் விநியோகம் இம்மாத இறுதியில் ஆரம்பம்

(வவனியா)

41 இலட்சம் ரூபா செலவில் திட்டமிடப்பட்டு முடிக்கப்பட்டுள்ள நெடுங்கேணி மின் விநியோக ஆரம்பம் இம்மாத இறுதிக்குள் நடைபெறுமென நம்பகரமான வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒட்டிசுட்டானில் இருந்து நெடுங்கேணிக்கு இணைப்பு மூலம் மின்சாரம் கொண்டு வரப்படுகின்றது.

மின் விநியோக ஆரம்ப தினத்தினை மிகவும் கோலாகலமாக நடாத்த நெடுகேணி கிராமமோதய சபையினர் உத்தேசித்துள்ளனர்.

உலக வங்கியின் நிதியில் இத்திட்டம் செயல் படுத்தப்பட்டது. கடந்த 7ம் திகதி மின் இணைப்பு ஆரம்பிக்கப்படவிருந்தது தவிர்க்கமுடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டது தெரிந்ததே.

## 31வது நாள் நினைவுஅஞ்சலியும் அந்தியேட்டி கிரியையும்

19-5-1985



திருமதி தங்கக்கண்டு செந்திவேல்

மலர்வு:
16-10-1930

உதிர்வு:
19-04-1985

அன்பின் திருவுருவே, பண்பின்பிறப்பிடமே, எங்கள் தெய்வமே, உங்களைப்பிரிந்து நாங்கள் எப்படி வாழ்வோம். உங்கள் அன்பை யாராலும் மறக்க முடியாத நிலையில் தவிக்கவிட்டு மின்னலென அணைந்து விட்ட எங்கள் தெய்வமே. உங்கள் நினைவு என்றும் எங்கள் மனதில் நிலைத்திருக்கும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
கணவன், மக்கள், மருமக்கள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் சுற்றத்தவர்கள்.
நடராஜா வீதி, வல்வெட்டித்துறை (3258)

## பிரம்மஸ்ரீ
## சு. க. சோமாஸ்கந்த ஐயர்
(பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம், திருக்கோணமலை)

அன்னாரின் ஆத்மசாந்திக் கிரியைகள் திருக்கோணமலையில் நடைபெறும்.

16-5-85 — தசாகம் 18-5 85 — சபிண்டீகரணம்
17-5-85 — ஏகோதிட்டம் 19-5-85 — கிரகயக்ஞம்

சோ. ரவிச்சந்திரக்குருக்கள்.

3293

இலங்கை இந்திய மக்களின் ஆவலைப் பூர்த்தி செய்யும்முகமாக, சென்னை மாநகரத்தில் மவுண்ட் ரோட், ஜெமினி சதுக்கம் (அண்ணா மேம்பாலம் அருகில்) அமைந்த

## "யாழ்ப்பாண இல்லம்"

அசைவ உணவகத்தைத் திறந்து முற்றிலும் இலங்கை முறைப்படி தயாரிக்கப்பட்ட உணவு வகைகளை பரிமாற இருப்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

உரிமையாளர்

**யாழ்ப்பாண இல்லம்,**
**பார்சன்கொமோசல் கொம்பிளெக்ஸ்**
**ஜெமினி சதுக்கம்,**
**121, மவுண்ட் ரோட்,**
**சென்னை 6**

3239

## லண்டன், பேர்லின்

## செல்வோருக்கு கைகொடுக்கிறது

# MACK TRAVELS LTD.

- ✶ குறைந்த கட்டணம்
- ✶ பிரச்னையற்ற பாதை
- ✶ துரிதமான ஒழுங்குகள்
- ✶ கொழும்பில் வசதிகள்

Dyn. Ads

## MACK TRAVELS LTD.

தரும் மேலதிக நன்மைகள் இவை:

- ★ யாழ்ப்பாணத்தில் இருந்தபடியே பயணத்துக்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிடலாம்.
- ★ கட்டுநாயக்கா வரை எமது பிரதிநிதி உங்களுடன் வந்து எல்லா உதவிகளும் செய்வார்.
- ★ பயணக் காசோலைகளை எந்தச் சிரமமுமின்றி எம்மிடமிருந்து பெற்றுவிடலாம்.
- ★ கொழும்பில் உணவு வசதி, தங்குமிட வசதி, கட்டுநாயக்கா செல்லப் பிரயாண ஒழுங்கு ஆகியவற்றை நாம் செய்து தருவோம்.
- ★ பாங்கொக், சிங்கப்பூர், மாலைதீவு, கோலாம்பூர் Copenhagen ஊடாக உள்ள வசதியான பாதைகளில் Berlin செல்ல ஒழுங்குசெய்வோம்.

இந்தியப் பிரயாணம்: இந்தியாவுக்கு விசா, கடவுச்சீட்டு (BONDING), கடவுச்சீட்டுப் புதுப்பித்தல், மாற்றுதல் ஆகியவற்றுக்கான சகல ஒழுங்குகளையும் செய்துதருகிறோம்.

உலகின் எப்பகுதிக்கும் எம்மிடம் விமானச் சீட்டுக்கள் பெறலாம்

பயணத்தை உறுதிசெய்தல் (CONFIRMATION), மீள உறுதிசெய்தல், தவிர்த்தல் (CANCELLATION) ஆகிய பணிகளையும் நாம் கவனிப்போம்.

மேலதிக விபரங்களுக்கு எமது அலுவலகத்தில்
திருமதி சாவித்திரிதேவி பாலசிங்கம் அவர்களுடன் தொடர்புகொள்க.

## MACK TRAVELS LTD.

இல. 8, முதலாவது ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24791

கிளைகள்:

QUICKS ENTERPRISES - TRAVELS AND TOURS,
533, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

QUICKS TRAVELS AND TOURS,
சரஸ்வதி தோட்டம், Church Road,
சாவகச்சேரி.

QUICKS ENTERPRISES
ஆடியபாத வீதி, கல்வியங்காடு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

MR. JOSEPH NAYAGAM,
Seven Temple Farm,
பரந்தன் சந்தி, பரந்தன்.

## மணிவாக்கு

துன்பங்கள் நிரந்தரமானவை அல்ல; அவை எப்பொழுதும் பாலத்தின் அடியில் ஓடுகின்ற தண்ணீரைப் போல ஓடிவிடும்.

—அன்னை சாரதாமணி.

## நமது நோக்கு

# கடலில் நடந்த கொடுமை

நிலைமைகள் கட்டு மீறிப் போவதற்கு முன் இனப் பிரச்னைக்கு ஒரு அரசியல் தீர்வினைக்காணுங்கள் எனக் கடந்த மே 7ந் தேதி அமைச்சர் திரு. சௌமியமூர்த்தி தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அறிக்கை விடுத்த அரை மாத காலத்துக்குள் வடபகுதியில் ஏற்பட்டுள்ள சம்பவங்களைப் பார்க்கும்போது நிலைமைகள் ஏற்கனவே கட்டு மீறிப் போக ஆரம்பித்துவிட்டதையே காட்டுகின்றன.

தீவிரவாதிகளைப் பிடிக்க அரச படைகள் கிராமங்களைச் சுற்றிவளைப்பதும், அவர்களின் போக்குவரத்தைக் கண்காணித்துத்தீவிரவாதிகள் பாதைகளில் கண்ணி வெடிகளைவைத்துத் தாக்குவதும், முகாம்கள், பொலிஸ் நிலையங்கள் தாக்கப்படுவதும் அதைத் தொடர்ந்து எதிர் நடவடக்கைகளில் ஆயுதப் படையினர் இறங்குவதும் இப்பகுதியில் ஒரு சாதாரண நிகழ்ச்சியாகிவிட்டது. இந்த நிலைமையுங்கூட இப்பொழுது மேலும் சீர்குலைந்து அப்பாவிச் சாதாரண பொதுமக்கள், ஆண்-பெண் - குழந்தைகள் உட்பட, மிலேச்சத்தனமான தாக்குதல்களுக்குள்ளாகி வருகின்றனர்.

வல்வெட்டித்துறையில் கடந்த 10ம் திகதிக்குப்பின் இடம்பெற்ற கொலைகள், கொள்ளைகள், தீவைப்புகள் பற்றி அப்பகுதிப் பிரஜைகள்குழுமூலம் கேட்டறிந்த யாழ் மாவட்ட இணைப்பதிகாரி பிரிகேடியர் வனசிங்கா அதிர்ச்சியை வெளிக்காட்டியதுடன் பதற்றத்தைத் தணிப்பதற்கான நடவடிக்கை எடுப்பதாக உறுதியுமளித்துச் சில தினங்களுக்குள்ளேயே நெடுந்தீவுக்கடலில் வர்ணிக்க முடியாத பயங்கர நிகழ்ச்சியொன்று நடந்தேறியிருக்கின்றது.

அனுராதபுரத்தில் சாதாரண பொதுமக்கள் கொலை செய்யப்பட்டுள்ளதைத் தயவுதாட்சண்யமின்றிக் கடுமையாகக் கண்டிக்கும் நாம் அதே வார்த்தைகளால் நெடுந்தீவுக்கடலில் இடம்பெற்றுள்ள சம்பவங்களையும் தயவுதாட்சண்யமின்றிக் கண்டிக்கிறோம்.

இந்த நாட்டின் ஆயுதப் படைகளுக்கு எதிராக வடக்குக் கிழக்கில் தீவிரவாதிகள் கடுமையான கெரில்லா யுத்தம் ஒன்றில் இறங்கியுள்ளார்கள். இப்பிரதேசங்களிலிருந்து ஆயுதப்படைகளை அகற்றும் வரை ஓய்வின்றிப் போராடப் போவதாகச் சூள் உரைத்து தமது அருமந்த உயிர்களையே பணயம் வைத்திருப்பவர்கள் அவர்கள். சிறு எண்ணிக்கையினராயிருந்தபோதிலும் மனத்துணிச்சல்மிக்க இவ்விளைஞர்களைப் பூண்டோடு அழித்தொழித்துவிட்ட பின்னரே மறுகாரியம் என்ற உறுதியுடன் அரசாங்கம் தனது கடல், தரை, ஆகாயப் படைகளை முடுக்கிவிட்டுப் போர் நடத்தி வருகின்றது.

இந்தப் போரில் யாருக்கு வெற்றிகிட்டும் என்பதைப் பற்றிச் சிறிதும் கவலைப் படாமல் தமது அன்றாட உணவுக்கு வழிதேடும் பணியில் ஈடுபட்டிருக்கும் ஒன்றுமறியாத ஏழைகள் எல்லாம் கூடத் தாக்குதல்களுக்கும், கொள்ளைகள் மற்றும் கற்பழிப்பு, வீடெரிப்புகளுக்கும் உள்ளாகிவரும் பரிதாபத்தை நாம் காண்கின்றோம்.

அநுராதபுரம் பகுதியில் தீவிரவாத தாக்குதலில் இறந்தவர் தொகை 146க்கும் அதிகம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அச்சம்பவத்தையடுத்து நிகழ்ந்த பாதகங்கள் பற்றி அரச செய்திஸ்தாபனங்கள் எதுவும் வெளியிடவில்லை.

நெடுந்தீவுக் கடலில் கத்திகள், கோடரிகள் போன்ற ஆயுதம் தரித்த பாதகர்கள் பால்மணம் மாறாத பச்சிளம் குழந்தையையும் கூட ஈவிரக்கமின்றி வெட்டிக் கொன்றிருக்கிறார்கள்.

[illegible] சம்பவத்திலும் விசாரணை எதுவுமின்றியே பயங்கரவாதிகளை தொடர்வு படுத்துபவர்கள் [illegible] டுவானுக்கும், நெடுந்தீவுக்குமிடையில் நடந்துள்ள சம்பவத்துக்கு யாரைச் சப்பந்தப்படுத்தப் போகிறார்கள் என்று தெரியவில்லை. ஆனால் எந்தவித மூடிமறைப்பினாலும் உண்மைகளை மக்கள் மத்தியில் இருந்து மறைத்துவிட முடியாது

எம்மைப் பொறுத்தவரை இம்மாதிரிச் சம்பவங்கள் அவை எங்கு நடந்தாலும் எவரால் நடத்தப்பட்டாலும் அவை வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டியவையே. இவை மீண்டும் நடைபெறாமல் தடுக்கப்படவேண்டியவை மட்டுமல்ல— உயிருடனோ பிணமாகவோ அனுராதபுரத்தில் ''பயங்கரவாதிகளை''த் தேடும் அரசாங்கம் இங்கே இக்கொடுமை புரிந்தவர்களை உடனடியாகக் கண்டுபிடித்துத் தண்டிக்க வேண்டும் என வற்புறுத்துகின்றோம்.

---

**வெள்ளிச்சிந்தனை**

# சைவ சமயப் பண்பாடும் தமிழர் வாழ்வும்

''தனக்குவமை இல்லாதான்
தாள் சேர்ந்தாற் கல்லால்
மனக்கவலை மாற்றல்
அரிது.''

''வேண்டுதல் வேண்டாமை
யிலானடி சேர்ந்தாற்
கல்லால்
யாண்டும் இடும்பை இல''

இன்றைய நிலைக்கு வள்ளுவர் வாக்கு அருமருந்தாகக் காணப்படுகின்றது. இன்று எம்மினம் நசுக்கப்படுவது மட்டுமன்று. அல்லற்பட்டு ஆற்றாது கண்ணீர் விடுகின்றது. நாள்தோறும் மரண பயத்தால் சித்திரவதைப்படுகின்றது. இவ்வேதனைகளைத் தீர்க்கத் தெய்வமும் இரங்கவில்லையே என்று பெரியோர்கள் மனவேதனை அடைகின்றார்கள். தெய்வமும் கைவிட்டுவிட்டதாவென்று பலர் ஏங்குகின்றளவு நாம் அல்லற்படுகின்றோம். தெய்வம் அருள் சுரக்காமைக்கு யாது காரணம் என்பதை நாம் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

புலவர் சி. விசாலாட்சி
குருகுலம், கிளிநொச்சி

எமது சமயம் சைவசமயம்; தொன்மையானது, உண்மையானது என்று நாம் பெருமை கூறுகின்றோம், பிரசாரம் செய்கின்றோம் வாதாடுகின்றோம். ஆனால் சைவசமயப் பண்பாட்டையும் தமிழின் கலாசாரத்தையும் கடைப்பிடித்து ஒழுகுகின்றோமா என்பதுதான் சந்தேகம். அவ்வாறு நடப்பது போல நடிப்பதனாலேதான் தெய்வமும் எங்கள் கண்ணீரைத் துடைத்துப் பாதுகாக்கவில்லையோ என்று எமது உள்ளம் தவிக்கின்றது. ஆனால் பிராயச்சித்தம் தேடத் தவிப்பதில்லை. இங்கேதான் நாம் மாபெரும் தவறுவிடுகின்றோம்.

சிவம் சைவசமயத்தின் முழுமுதற் கடவுள். சைவசமயத்தவர் சிவத்தைப் பிரமமாகக் கொண்டு சிவத்தை வழிபட்டுச் சைவசமய ஒழுங்கைக் கடைப்பிடிப்பர். இக்கொள்கை மிகப்பழைய காலந்தொட்டே தமிழரிடம் காணப்பட்டது. அன்று வாழ்ந்த தமிழர் பேச்சுத் தமிழென்றால் மூச்சும் சைவசமயம் என வாழ்ந்தனர். வாழ்ந்து காட்டினர்.

சைவசமயப் பண்பையும் தமிழின் கலாசாரத்தையும் 'கண்ணை இமை காப்பது போல''ப் பேணித் தமிழ் அரசர் முதல் குடிகள்வரை பாதுகாத்தனர். இதனால் தெய்வம் மக்கள் வேண்டுகோளையும் அரசரின் வேண்டுகோளையும் நிறைவேற்றி வந்தமையால் மக்கள் எவ்வித இடையூறோ இடும்பையோ இன்றி வாழ்ந்து வந்தனர். மாதம் மும்மாரிதும் பொழிந்தது. இதனால் நாடு செழித்து செல்வம் பெருகியது. பசியும் பிணியும் சண்டையும் பூசலும் மக்கள் அறியாது வசியும் வளனும் பெருக்கி வாழ்ந்தனர்.

அன்பு, கருணை, இரக்கம், தியாகம், சேவை, பொறுமை ஆதிய குணங்கள் சைவசமயத்தின் பண்பாகும். இப்பண்புகளை மக்கள் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் தவறவிடாது பேணிக்காத்தனர். இப்பண்புகளைப் பாதுகாக்கத் தமிழர் கலாசாரம் கை கொடுத்துதவியது.

தமிழர் கலாசாரமும் சைவப்பண்பும் ஒன்றையொன்று இணைபிரியாதவையாகச் சைவமும் தமிழும் போலக் காணப்பட்டமையால், தமிழர் தமக்குத்தாமே நிகராக மாற்றார் அஞ்சிக் கூனிக் குறுகி மறையும்படி வாழ்ந்தனர். மறலிகூட அஞ்சும்படி வாழ்ந்த பெருமை சைவசமய வழிபாட்டிற்கு மட்டுமே இருந்ததை மார்க்கண்டேயர் சரிதம், சத்தியவான் சாவித்திரி கதை, அரிச்சந்திர புராணம் வலியுறுத்திக் கூறுகின்றன. அண்மையில்வாழ்ந்து அந்நியரை அடியோடு பாரத்தைவிட்டு வெளியேற்றிய மகாத்மா காந்தியை உருவாக்கியது எது? சமயப் பண்பென்றால் மிகையில்லை.

இவ்வாறு பல நிகழ்ச்சிகளை எமது திருமுறைகள் சைவ சித்தாந்தங்கள், புராணங்கள், இதிகாசங்கள், காப்பியங்கள் கற்பிப்பதை நாம் அறிவோம். ஆனால் அவைகள் காட்டிய நெறிகளை அனுட்டிக்காது மேலைத்தேச நாகரீகங்களில் மோகங் கொண்டு தெய்வச் சாபத்திற்கு ஆளாகிவிட்டோம்.

வடமொழியையும் தமிழ் மொழியையும் அருளிய எம்பெருமான் இருமொழிகளையும் தம்மிரு கண்களாக அருளாரை அவதரிக்கச் செய்து பேணிப் பாதுகாத்த பெருமைகளை நாம் நூல்கள் வாயிலாகவும் பெரியோர் வாயிலாகவும் அறிவோம். காலத்திற்குக் காலம் சைவத்திற்கும் தமிழிற்கும் இடர்வரும்போது சமய குரவர்களாற் தோற்றுவித்து அவற்றை வளர்த்த எம்பெருமான் ஏன் இன்று பேசாதிருக்கின்றார்.

அன்று வாழ்ந்த மக்களும் தேவர்களும் அரசர்களும் இறைவனிடம் முறையிட்டு அழுதனர். போருக்குச் செல்லும் அரசன் கொற்றவைத் தெய்வத்தைவழிபட்டு நேர்த்தி செய்த பின்பே போருக்குச் சென்றான். அதனால் வெற்றியும் ஈட்டினான். அதுபோன்று எம்மவரும் செய்கின்றார்களா?

இனிமேலாதல் நாம் எம்மைப் பேணிப் பாதுகாக்கச் சைவசமய அனுட்டானங்களை கடைப்பிடித்து தமிழர் கலாசாரத்தைப் பேணவேண்டும். அரசன் 'அன்று கொல்லும் தெய்வம் நின்று கொல்லும்' என்ற நம்பிக்கைகொண்ட அன்றைய மக்கள் அறத்தைப் பேணினர்.

அறம் பேணுவதில் பெண்கள் முதலிடம் வகுத்தனர். பண்பான நடையுடை பாவனைகளைப் பேணுவதே அன்றைய பெண்களின் இலட்சியமாகக் காணப்பட்டது. 'ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே' என்ற பழமொழியை மதித்த பெண்கள் தம்நடத்தையால் நாட்டிற்கும் மக்கட்கும் தீங்கு உண்டாகக் கூடாதென்று மிகவும் கவனமாகவும் நிதானமாகவும் நடந்துவந்தனர். இதனால் நல்ல சமுதாயம் உருவாகியது. தலைவிரித்தல், அதிகாலையில் நித்திரை விட்டெழும்பாதிருத்தல். காலைக்கடமைகளையும் வீட்டுப் பணிகளையும் செய்யாதிருத்தல் வாயடித்தல், ஏறுமாறாக நடத்தல் ஆகியனவற்றை நன்கு சென்று தள்ளினர். மகாலட்சுமி போன்று வீட்டிலும் விழாவிலும் மற்றும் நிகழ்ச்சிகளிலும் பங்கெடுத்தனர். இதனால் நாடும் சமுதாயமும் நன்மை பெற்று வந்தது பழிபாவத்திற்கு அஞ்சி நடந்தனர். அறமும்அருளும் பெருக்கி வந்தனர். இதனால் அமைதியும் சாந்தியும் நிறைந்த பெருவாழ்வைப்பெற்றனர்.

இன்று நடப்பதென்ன ஆண்களும் சரி பெண்களும் சரி தெய்வநம்பிக்கையும் சமய அனுட்டானத்தையும் மறந்து வாழ்கின்றனர். பணத்திற்காக மனச்சாட்சியையும், தெய்வ நீதியையும் அபாவனை செய்கின்றனர். ஜீவகாருண்ணியம் சிறிதுமின்றி சர்வாதிகாரங் கொண்டு வாழ்கின்றனர் இக்குலேதான் தெய்வம் மௌனமாக இருக்கின்றது.

ஆகம விதிகளை மறந்த பெண்கள் தலைவிரிகோலமாக நடமாடுகின்றனர். இக்கொள்கை எல்லாக் காரியாலயங்கள் மட்டுமன்றி பாடசாலைகள், ஆலயங்கள், விழாக்களிலும் காணமுடிகின்றது. உடை நடை பழக்க வழக்கங்களும் சமயத்திற்கு ஏற்றபடி அமையாமையும் தெய்வசாபத்திற்கு ஓர் காரணமாகும். தெய்வ அனுக்கிரகமின்மையே இன்றைய பிரச்னை என்பதை யாரும் இதுவரை உணராமை பெரிய வேதனையாகும்.

அதிகாலையில் எழுந்து வீடு வாசலைப்பெருக்கி கோலமிட்டு தம்மைத் தூய்மைப் படுத்திக் குங்கும நெற்றியிலிட்டுக் குத்துவிளக்கேற்றும் பெண்களால் வீடு மங்களமடைந்து நன்மக்களும் நற்சமுதாயமும் உருவாக்கிய காலம் மீண்டும் ஒளிமயமாகப் பெண்களுடன் ஆண்களும் ஒத்துழைத்தல்வேண்டும்.

''பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும்''சிறந்தோங்க வேண்டின் சைவப்பண்பாட்டையும் தமிழ்க் கலாச்சாரத்தையும் எல்லா மக்களும் கடைப்பிடித்தல் அவசியமாகும்.

---

**வடமராட்சிப்பகுதி**

# போக்குவரத்தை சீராக்க கோரிக்கை!

(புலோலி)

வல்லை, முள்ளிப் பாலங்களை முழுமையாகத் திருத்தி வடமராட்சிப் பகுதி மக்களின் போக்குவரத்து வசதிகளைச் சீர்செய்ய நடவடிக்கை எடுக்குமாறு வடமராட்சி தெற்கு-மேற்குப் பிரிவுப் பிரயாணிகள் சங்கம் யாழ். அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளது.

இதுசம்பந்தமாக வடமராட்சி தெற்கு-மேற்குப் பிரிவுப் பிரயாணிகள் சங்கத் தலைவர் திரு. த. மார்க்கண்டு யாழ். அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

வல்லை - முள்ளிப் பாலங்கள் உடைக்கப்பட்டமையினால் வடமராட்சிப் பகுதி மக்களின் போக்குவரத்து வசதிகள் நிலைகுலைந்துள்ளன. தற்பொழுது இப்பாலங்கள் ஓரளவுக்குத் திருத்தப்பட்டிருந்தாலும் மழைக்காலம் நெருங்குவதனால் மழை வந்ததும் இந்த வல்லை, முள்ளிப் பாலங்களுக்கூடான போக்குவரத்துகள் முழுமையாகஸ் தம்பித்துவிடும் எனவே இப்பாலங்களை முழுமையாகச் செப்பனிட ஆவன செய்யவேண்டும்.

இதுசம்பந்தமாக வேண்டிய நடவடிக்கை எடுக்குமாறு பெருந்தெருக்கள் திணைக்கள பிரதான பொறியியலாளரை யாழ் அரசாங்க அதிபர் திரு. எம்.பஞ்சலிங்கம் பணித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

# திருநெல்வேலி சிவன் கோவில் தேர் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சிவன் கோவில் 18திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு தேர் உற்சவம் நடைபெறும். 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்த உற்சவம் நடைபெறும். 20ம் திகதி திங்கட்கிழமை பி. பகல் 2 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை பூங்காவன உற்சவம் நடைபெறும் அத்துடன் விஷேச மேள வாத்தியமும் இடம் பெறும்.

### பெரியார் மாவட்டத்தில்

# தீவிர மறியல் போராட்டம் 500 தி. மு. க.வினர் கைது!

(சென்னை)

சென்னை பெரியார் மாவட்டத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக தீவிர மறியல் போராட்டம் செய்த 500 தி. மு. க தொண்டர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இத்தொண்டர்கள் பெரியார் மாவட்டத்திலுள்ள அரச அலுவலகங்கள் முன்பாக தீவிரமான மறியல் போராட்டம் நடத்தினர்.

இலங்கைத் தமிழர் பிரச்னையில் இந்திய மத்திய அரசின் கவனத்தை விரிவான முறையில் திருப்புவதே இந்த மறியல் போராட்டத்தின் நோக்கம் என்று தி மு. கவினர் கூறினர். இதுபோன்ற மறியல் நடவடிக்கைகளைத் தமிழகத்தில் தொடரப் போவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

### மதுரை மீனாட்சி அம்மன்

# ஆலயத்தில் பிரமாண்டமான தவில் கச்சேரி!

### 101 கலைஞர்கள் கலந்துகொண்டனர்

(சென்னை)

தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம், ஆந்திரா, பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த 101 தமிழ வித்துவான்கள் கடந்த சனியன்று மதுரை மீனாட்சி சுந்தரேசரர் ஆலயத்தில் தவில் கச்சேரி ஒன்றினை பிரமாண்டமான முறையில் நடத்தினார்கள்.

நோய்வாய்ப்பட்டு நியூயோர்க் மருத்துவமனையில் இருந்த தமிழக முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரன் பூரண சுகம் பெற பாளையம்பட்டி ஏ. ஆர். சுப்பிரமணியம் செய்து கொண்ட நேர்த்திக்கடனை முன்னிட்டே இந்த பிரமாண்டமான தவில் கச்சேரி இடம் பெற்றது. (ரா)

### அநுராதபுரம் சம்பவம்

# சென்னையில் தீவிரவாத அமைப்பொன்று கண்டனம்

(சென்னை)

அநுராதபுரத்தில் அப்பாவிச் சிங்கள மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதை இலங்கைத் தமிழ்த் தீவிரவாத அமைப்பொன்று கண்டித்துள்ளது.

இந்த அமைப்பு எதுவென்று தெரிவிக்கப்படவில்லை அத்துடன் அநுராதபுரம் சம்பவத்துக்கு தமிழ்த் தீவிரவாதப் பிரிவொன்றே காரணம் என்று கூறப்பட்டுள்ள போதிலும் எந்த ஒரு அமைப்பும் அச்சம்பவத்துக்கு உரிமை கோரவில்லை.

சென்னையில் கண்டனம் வெளியிட்டுள்ள தமிழ்த்தீவிரவாத அமைப்பு அப்பாவி மக்கள் கொல்லப்படுவது ஏற்றுக் கொள்ள முடியாததும் கண்டிக்கப்பட வேண்டியதுமாகும், என்று தெரிவித்துள்ளது.

# சாதாரண தமிழ், சிங்கள மக்கள் கொல்லப்படுவது நிறுத்தப்படவேண்டும்!

### சென்னையில்சம்பந்தன் வேண்டுகோள்

(சென்னை)

''சாதாரண தமிழ், சிங்கள மக்கள் எவ்வித காரணமுமின்றி படுகொலை செய்யப்படுவதும் துன்புறுத்தப்படுவதும் உடன் நிறுத்தப்பட வேண்டும்'' என்று முன்னாள் திருமலை பாராளுமன்ற உறுப்பினர் திரு இரா. சம்பந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் தனது வேண்டுகோளில் இப்படியான செயல்கள் மூலம் தமது இலட்சியத்தை ஒருநாளும் அடைய முடியாது என்றும் தெரிவித்துள்ளார். (ரா)


மிளகாய் இலைச் சுருளைத் தடுத்து அதிக விளைச்சலைப் பெறுங்கள்

BASF

குமுலுஸ் எஸ்

நீரில் கரையக் கூடிய 80% கெந்தகம்

- நீரில் கலந்தவுடன் பால் நிறமாக மாறுகிறது.
- மிளகாய் இலைச் சுருளைத் தோற்றுவிக்கும் மைட்களை அழித்தொழிக்கிறது.
- மரக்கறி பயிர் வகைகளில் 'காளான்' தாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது

இது ஒரு ''மேற்கு ஜெர்மனி 'BASF''' தயாரிப்பாகும்.




குமுலுஸ் எஸ்

500 கிராம் ரூபா 18/50

கிடைக்குமிடம்: சகல விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரிடமும்

Metropolitan

M LIMITED மக்வுட்ஸ் ஸ்தாபனம்

2 ஞானார்த்தபிரதீப மாவத்தை, த.பெ.இல-98 (முன்னாள் மருதானைரோட்) கொழும்பு - 9

[தொலைபேசி; 597965


### இலங்கை வங்கி

# தட்டெழுத்துப் பரீட்சையை மீண்டும் நடத்த கோரிக்கை

(புலோலி)

இலங்கை வங்கி ஆங்கிலத் தட்டெழுத்தாளர்களை நியமிப்பதற்கு நடாத்திய தட்டெழுத்துப் பரீட்சைக்கான கடிதங்கள் வடபகுதியில் உள்ள பரீட்சார்த்திகளுக்கு உரிய நேரத்தில் கிடைக்காதபடியினால் இப்பகுதி விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்றமுடியவில்லை.

எனவே இப்பகுதி விண்ணப்பத்தாரிகளின் நன்மை கருதி இந்தப் பரீட்சையை மீண்டுமொரு திகதிக்கு நடாத்த ஆவன செய்யவேண்டுமென பருத்தித்துறை பிரஜைகள் குழு இலங்கைவங்கி ஆளணி முகாமையாளரைக் கேட்டுள்ளது.

பருத்தித்துறை பிரஜைகள் குழுத்தலைவர் பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கத்தால் இலங்கை வங்கி ஆளணி முகாமையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இவ் ஆங்கிலத் தட்டெழுத்தாளர்களை நியமிப்பதற்கான பரீட்சைக் கடிதம் 27-2-85 அன்று திகதியிடப்பட்டுள்ளது. ஆனால் கொழும்பில் தபாலில் அக்கடிதங்கள் சேர்க்கப்பட்ட திகதி 28-3-85 என தபால்கந்தோர் முத்திரை பதிக்கப்பட்டுள்ளது பரீட்சை 7-4-85 நடைபெறுமெனக்குறிப்பிடப் பட்டுள்ளது. ஆனால் விண்ணப்பத்தாரிகளுக்கு கடிதங்கள் 8-4-85 அன்றே கிடைத்துள்ளது இக்கடிதங்கள் உரியநேரத்தில் விண்ணப்பத்தாரிகளுக்குக் கிடைக்காதபடியினாலேயே அவர்கள் இப்பரீட்சைக்குச் சமூகமளிக்க முடியவில்லை. எனவே இவ்வாறு பாதிக்கப்பட்ட விண்ணப்பத்தாரிகளின் நன்மை கருதி இத்தட்டச்சுப் பரீட்சையை இன்னொரு திகதிக்கு நடாத்த ஆவன செய்ய வேண்டும்.

### கைதானவர்கள் விடுதலை

(வவனியா)

கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்ட வவனியா வர்த்தகர்கள் நால்வரும் விடுக்கப்பட்டுள்ளனர்.

மே தினத்தன்று குறித்த நால்வரும் கைது செய்யப்பட்டனர் என்பது தெரிந்ததே.

# கொழும்பில் 150 கேடிகள் காவலில் வைக்கப்பட்டனர்!

(கொழும்பு)

அநுராதபுரச் சம்பவங்களையடுத்து கொழும்பில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

கொழும்பையும், அதன் சுற்றுப்புறங்களையும் சேர்ந்த சுமார் 150 கேடிகள் உடனடியாகப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைககப்பட்டனர்.

இதுதவிர பதட்டநிலை ஏற்படாதவாறும், மக்கள் குழம்பிவிடாதவகையிலும் பொலிஸ் ரோந்துச் சேவை தீவிரமாக்கப்பட்டிருந்தது.

கொழும்புப் பகுதி மக்கள் அநுராதபுரம் சம்பவங்களைக் குறித்து அதிகம் அலட்டிக் கொள்ளாதவர்களாக இருந்தனர் என்றும், கூறப்பட்டது. காரியாலயங்கள், மற்றும் தொழிலகங்கள் யாவும் சுமுகமாக இயங்கின.

# கலை கலாசாரங்களை அழியாது காக்கவேண்டும்

(புலோலி)

''தமிழ் கலை, கலாச்சார, பாரம்பரியங்களை அழியவிடாது பாதுகாத்து வளர்க்கவேண்டியது கலைமன்றங்களின் முக்கிய கடமையாகும். கிராமிய மக்களின் அபிவிருத்தி மேம்பாட்டிற்கும் கலை, கலாச்சார பாரம்பரிய பாதுகாப்பு வளர்ச்சிக்கும் கிராமிய மக்கள் ஒருங்கிணைந்து ஒற்றுமையாகச் செயற்படவேண்டும்''.

இவ்வாறு பருத்தித்துறை லயன்ஸ் கழகத்தலைவர் டாக்டர் எம் கே. முருகானந்தன் பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலை மன்றத்தின் 23வது ஆண்டுவிழாவிலும் கலைவிழாவிலும் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார். விழாவிற்கு மன்றத்தலைவர் திரு கே. குமாரவேல் தலைமை தாங்கினார். தொடர்ந்து உரையாற்றிய லயன்ஸ் கழகத்தலைவர் டாக்டர் முருகானந்தன் குறிப்பிட்டதாவது,

கிராமிய இளைஞர், யுவதிகளின் வாழ்க்கைத்தர உயர்ச்சிக்கும், கிராமிய அபிவிருத்தி மேம்பாட்டிற்கும் கலைமன்றங்கள் வழிவகுக்கவேண்டும். கிராமிய மூலவளங்களைப் பயன்படுத்தி கைத்தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கவேண்டும். இளைஞர், யுவதிகளை கால்நடைவளர்ப்பு வீட்டுத் தோட்டம் போன்ற முயற்சிகளில் ஈடுபடுத்தவேண்டும்.

ஞானசம்பந்தர் கலைமன்றம் இப்பகுதிகளின் அபிவிருத்தி மேம்பாடு கருதி பல்வேறு வகையான முயற்சிகளை மேற்கொண்டு வருவது மகிழ்ச்சிக்குரியதாகும். மன்றத்தால் நடாத்தப்பட்டு வரும் நூல்நிலையம், தையல் வகுப்பு நுண்கலை வகுப்புகள், பாலர் பாடசாலை என்பன மிகத்திறமையாக இயங்கி வருவது பாராட்டப்பட வேண்டியதாகும் இம்மன்றம் மேலும் வளர்ச்சியடைந்து இப்பகுதி மக்களுக்கு சிறந்த சேவையாற்ற சகலரும் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும்;

பட்டயக்கணக்காளர் ஏ. சோமசுந்தரம்பிள்ளை பரிசில்களை வழங்கினார்.

# ஜனாதிபதியின் ஆலோசகர் ரஜீவையும் சந்திப்பார்

(கொழும்பு)

ஜனாதிபதியின சிரேஷ்ட ஆலோசகர் திரு. எஸ்மண்ட் விக்கிரமசிங்க இந்தியததுணை அமைச்சர் ஜனாப் குர்ஷித் ஆலம்கானை நேற்று சந்தித்து பூட்டானில் நடைபெற்ற பூர்வாங்க மாநாட்டில் இலங்கை முதலில் கலந்து கொள்ளாததற்குரிய காரணங்களை விளக்கிக் கூறினார்.

இதன் பலனாக இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக இந்தியப் பாராளுமன்றத்தில் ஜனாப் ஆலம்கான் தெரிவித்த கருத்தினால் பூட்டான் மாநாட்டில் ஏற்பட்ட அபிப்பிராய பேதங்களும் தெளிவுபடுத்தப்பட்டு தீர்க்கப்பட்டுவிட்டன என்று பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அதேவேளை திரு. எஸ்மண்ட் விக்கிரமசிங்க, ஜனாப் ஆலம்கானுடன் புதுடில்லி செல்லவுள்ளதாகவும் இந்திய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் செல்லும் அவர் சில நாட்கள் புதுடில்லியில் தங்கியிருப்பதுடன். இந்தியப்பிரதமர் ரஜீவ் காந்தியை சந்தித்து விரிவாக பேச்சுவார்த்தை நடத்துவார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ரா)

### பொலிகண்டி கலாவதி மரண விசாரணை

(யாழ்ப்பாணம்)

பொலிகண்டி கலாவதிமரண விசாரணை நேற்று யாழ் நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் எடுக்கப்பட்டது.

இரசாயன பரிசோதனை அறிக்கை வந்து சேரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அடுத்த தவணைக்கு, வல்வெட்டித்துறை சார்ஜன்ட் புவிங்கத்தை ஆஜராகுமாறு நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

விசாரணை அடுத்த மாதப் 5ம் கேதிக்கு ஒத்தி போடப்பட்டுள்ளது. (க)

றீகல் மினி
தினசரி 10-30 மட்டும்
EAGLES ATTACK AT DAWN
(War Film)

ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2-00
கமலஹாசன்- ஜெயபிரதா
மஞ்சுபார்கவி
சலங்கை ஒலி
(ஈஸ்ட்மன் கலர்)
1984ம் ஆண்டின்
மிகச்சிறந்த படம்

லிடோ சினிமா
சுதாகர் - ராதிகா
நடித்த
ஆயிரம் வாசல்
இதயம்
(ஈஸ்மன்கலர்புதியகொப்பி)

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2.30
பாக்கியராஜ் - சரிதா
நடித்த
மௌன கீதங்கள்
(ஈஸ்மன் கலர்)
புதிய கொப்பி

மொடேர்ண்
மினி சினிமா
(ஸ்ரீலங்கா அச்சக லேன் ராஜா தியேட்டருக்கு அருகாமையில்)
13-5-85 முதல்
Dracula
ரகுலா
சிறந்த நடிப்பும், பாலியல் காட்சியும் நிறைந்தது.
மிகக் கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்.
ஆசனங்களுக்கு முந்துங்கள்.

லதா மினி
(கோண்டாவில்)
சிரஞ்சீவி நடித்த
துப்பறியும் சிங்கம்

ஹரன் சினிமா
தினசரி 10-30 — 2-30
250 நாட்களுக்குமேல் காட்சியளித்த வெற்றிச் சித்திரம்
மோகன் - பூர்ணிமா
வி தி
(கலர்)

வின்ஸர்
தினசரி 10-30, 2-00
4-15
Roger moore Ian Henry
in
VENDETTA FOR THE SAINT
ஜேம்ஸ் பொண்ட் சித்திரம்

யாழ். வின்ஸர் மினி
தினசரி: 10-30, 2-30
ரஜனிகாந், ஸ்ரீ ப்ரியா, சுந்தரராஜன், நாகேஷ், சுருளிராஜன்
நடித்த
தாய் மீது சத்தியம்
(தேவர் பிலிம்ஸ்)

வடபகுதி மக்கள்————

# என்றோ ஒரு நாள் என்னை உணர்வார்கள்!

## வடபகுதி மாணவர் மத்தியில் லலித்

[கொழும்பு]

''வட பகுதியில் உள்ளவர்களில் சிலர் என்னை ஒரு கடுமையானவன் என்றும், சிடுசிடுப்பானவன் என்றும் கருதி வருகின்றார்கள். ஆனால் என்றாவது ஒருநாள் என்னை அவர்கள் நன்கு உணர்வார்கள்'' என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மஹாபொல புலமைப் பரிசில்கள் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு வடபகுதியிலிருந்து வந்த மாணவர்கள் மத்தியில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. லலித் தொடர்ந்து கூறியதாவது:-

''மஹாபொல புலமைப் பரிசில் எந்த ஒருஇன மதப் பிரிவினருக்குமுரியதல்ல. சகல மாணவர்களுக்கும் இது எதுவித வேறுபாடுமின்றி வழங்கப்படும்'' என்றார்.

மஹாபொல புலமைப் பரிசில் பெற கொழும்பு வந்திருந்த வடபகுதி மாணவர்களுக்கு மீண்டும் பாதுகாப்பாக யாழ்ப்பாணம் திரும்புவதற்கான ஒழுங்குகளைச் செய்வதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

(கி)

## கொள்ளையை முறியடிக்க முற்பட்ட இராணுவவீரர் பலி!

[கொழும்பு]

கொள்ளையொன்றை முறியடிக்கச் சென்ற இராணுவ வீரர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை பிலியந்தலையில் இடம்பெற்றது.

கொல்லப்பட்ட வீரர் சோமதாசா என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் பிலியந்தலையில் வீதியால் நடந்து வந்துகொண்டிருந்தபோது பெற்றோல் நிலையம் ஒன்றில் கொள்ளை முயற்சி ஒன்று இடம்பெற்றுக் கொண்டிருந்தது.

இதனையறிந்து அவ்வீரர் உடனடியாக அந்நிலையத்தினுள் பிரவேசித்து கொள்ளையர்களை மடக்க முற்பட்டார். ஆனால் அவரைக கொள்ளையர்களில் ஒருவன் கைத்துப்பாக்கியால் சுட்டபின்னர் தனது சகாவுடன் மோட்டார்சைக்கிளில் தப்பியோடிதாகத் தெரிவிக்கப்பட்டது.

சுடப்பட்டவர் படுகாயமடைந்த நிலையிலேயே மரணமானார். இச்சம்பவம் குறித்து பிலியந்தலை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மனோகரன் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்.

(கி)

## பொய்த்தகவல் கொடுத்தவர் கைது

[கொழும்பு]

காட்டுப்பகுதியில் சடலங்கள் இருப்பதாக பொய்த்தகவல் கொடுத்த நபர் ஒருவர் மூதூரில் கைது செய்யப்பட்ளார்.

மொஹமட்அபூபக்கர் என்ற இந்நபரை இம்மாதம் 20ந் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும் படி நீதவான் திரு. எம் கே செல்வராசா உத்தரவிட்டுள்ளார்.

மூதூர்க்காடுகளில் 116 சடலங்கள் காணப்படுகின்றன என்ற தகவலை இந்நபர் தெரிவித்திருந்ததாகவும், ஆனால் தேடுதலின் போது இது பொய்யானதென்றும் தெரியவந்தது. இதனையடுத்தே அந்நபர் கைது செய்யப்பட்டார்.

கடந்த சனிக்கிழமை

## கடத்தப்பட்ட வர்த்தகர் குமாரசாமி விடுதலை!

[யாழ்ப்பாணம்]

இனந் தெரியாதவர்களால் கடந்த சனிக்கிழமை கடத்தப்பட்ட திரு. த. குமாரசுவாமி நேற்று அதிகாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் வீதியிலுள்ள அவரது வீட்டு வாசலில் விடப்பட்டார்.

கடந்த சனிக்கிழமை தம்மைக் கடத்திய இனந் தெரியாதவர்கள் கண்களைக் கட்டி வானொன்றில் கூட்டிச் சென்றதாகவும், சுமார் ஒரு மணிநேர ஓட்டத்தின் பின் நள்ளிரவு ஒரு கல்வீட்டை அடைந்ததாகவும், அங்கு 5 தினங்கள் இருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

கடைப் பிரச்னை தொடர்பான விசாரணைக்காகவே கடத்திச் செல்லப்பட்டதாகவும், கடத்தியவர்களின் தலைவரைச் சந்தித்து விசாரணை நடந்த பின் எவ்வித நிபந்தனையுமின்றி விடுவிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அந்த வீட்டில் ஒருநாள் மட்டும் 'பத்திரிகை' ஒன்று தரப்பட்டதாகவும், அதன் பின் எந்தப் பத்திரிகையும் தரப்படவில்லையென்றும், தினமும் பத்திரிகை படித்துப் பழக்கப்பட்டதனக்கு இது பெருங்குறையாக இருந்ததாகவும் அவர் தெரிவித்தார்

மாற்று உடைகள் வழங்கப்பட்டதாகவும், தினமும் குளிக்க வசதி இருந்ததாகவும் அந்த வீட்டில் றேடியோ இருந்ததாகவும் தெரிவித்தார்.

உணவு விஷயத்தில் எவ்வித குறையும் வைக்கவில்லையென்றும், விரும்பிய சாப்பாடு தந்தார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க)

ஸ்ரான்லி மினி
(சினிமா)
10-30, 2-15, 4-15
Mckennas Gold
அதிபயங்கரச் சண்டை. குதிரை ஓட்டங்கள் பாலியல் காட்சிகள்
5'X5' திரையில்

ஆனந்தி
வீடியோ சினிமா
[மனோகராவில்]
தினசரி 10-30, 2-30
எம். ஜி ஆர். லதா
நம்பியார்
ராஜ ராஜன்
(கலர்)

S. T. L. மினிசினிமா
(திருநெல்வேலி)
மு. ப 10-30 பி. ப. 2-00
எம். ஜி ஆர் — பானுமதி
P. S. வீரப்பா
நடித்த
"மலைக்கள்வன்"

4-30 P. M.
I Spit on Your Grave
(கண்டிப்பாக வயது வந்தவர்கட்கு மட்டும்)

## மரண விசாரணை இன்று நீடிக்கும்

(யாழ்ப்பாணப்)

நெடுந்தீவுப் படகுப் பிரயாணிகளில் இறந்தவர்களின் மரண விசாரணை நேற்று மேலதிக நீதவான் ஜே. பி. எஸ். வரதராசா முன்னிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் நடைபெற்றது

இறந்தவர்களின் நலனைக் கவனிக்க சட்டத்தரணிகள் இராஜா விசுவநாதன், ஆர். இ. தம்பிரத்தினம், ஆர். ஆர் தங்கராசா, ஆர். பாலசுப்பிரமணியம் ஆகியோர் ஆஜராகி இருந்தனர்

மரணமானவர்களில் 19 பேரின் சடலங்கள் உறவினரால் அடையாளம் காட்டப்பட்டன.

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்ட நீதவான் மீதி சடலங்களின விசாரணைகளை இன்றுவரை ஒத்திவைத்தார்.

சட்ட வைத்திய அதிகாரி, வைத்திய கலாநிதி எஸ். சரவணபவானந்தன் பிரேத பரிசோதனை செய்தார். பிற்பகல் 19 சடலங்கள் பிரேத பரிசோதனை செய்யப்பட்டதாகவும் மீதிச் சடலங்களின் பரிசோதனை இன்று நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது

சடலங்களை வெள்ளைக் கொடி கட்டிய இருபடகுகளில் கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகளை யாழ். அரச அதிபர் திரு. எம் பஞ்சலிங்கமும், யாழ் மாவட்ட அமைச்சின் இணைப்பதிகாரி திரு எஸ் பி. பாலசிங்கமும் செய்துள்ளனர். இன்று இச்சடலங்கள் எடுத்துச் செல்லப்படும். (மா)

## 8 சடலங்கள்..-

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பகீரதப் பிரயத்தனத்தின் பலனாகவே மேற்படி சடலங்கள் வவனியா ஆஸ்பத்திரிக்கு நேற்றுமாலை அனுப்பி வைக்கப்பட்டன.

மேற்படி எண்மரின் பெயர்களும் நேற்றைய 'ஈழநாடு' டதிப்பில் வெளிவந்திருந்தது. இச்சடலங்களை உறவினர்கள் இன்றே பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

உ

இணுவில்
ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார்
கோவில்

சித்திர மஞ்ச
வெள்ளோட்ட விழா

17-5-85 வெள்ளிக்கிழமை
பிற்பகல் 2-00 மணி

இராஜஸ்தபதி, கலாகேசரி
ஆ. தம்பித்துரை S. L. E. S.
படைப்பு கலாகேசரி கலாலயம் கலைஞர்கள்
கௌரவ பட்டமளிப்பு வைபவம்
பிற்பகல் 3-00 மணி

அனைவரும் வருக!

குறிப்பு: வைகாசி 6-ம் திகதி (19-05-85) ஞாயிற்றுக் கிழமை மஞ்சத் திருவிழா நடைபெறும். 6 ம் திருவிழாவன்று பகல் விநாயகப் பெருமானுக்கு 1008 சங்காபிஷேகம் நடைபெற்று நண்பகல் மகேஸ்வர பூஜை [அன்னதானம்] நடைபெறும் மாலை 5-30 மணியளவில் புதிய சித்திர மஞ்சத்தில் எம்பெருமான் வள்ளிதேவசேனசமேத முருகவேள் ஒரு புறமும் திருமகள் மறுபுறமாக எழுந்தருளி வீதிவலம் வந்து அருள்புரிவார்.

இங்ஙனம்
6-ம் திருவிழா உபயகாரர்கள்

3302

# இப்படியும் நடக்கிறது

தமிழ்ப் பகுதிகளில் தலைவிரித்தாடும் சில சம்பவங்கள் பற்றிய செய்திகள். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு மட்டும் 'அலர்ஜியா'?

ஐந்து கண்டங்களிலுமுள்ள அத்தனை நாடுகளின் வானொலிகளும் இலங்கையின் வட,கிழக்குச் செய்திகளை உடனுக்குடன் ஒலிபரப்ப, நமது நாட்டு வானொலி மட்டும் புறக்கணித்து மௌனம் சாதிக்கிறது!

உலகத்தில் எங்குமே நடந்திருக்கமுடியாத மயிர்சிலிர்க்கும் கொடூரச் சம்பவம், நயினாதீவுக் கடலில் நடந்திருக்கிறது. முப்பத்துஆறு மணிநேரம் தாண்டிவிட்டது இலங்கை வானொலி..............கப்சிப்!

ஜனநாயகம் வாழ்க! தார்மீகம் வாழ்க! செய்திச் சுதந்திரம் வாழ்க!

'ஊடுருவி'

## "யாழ். பொது நூலகம் மூடும் எண்ணம் இல்லை!"

### ஆணையாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

''யாழ். பொதுசன நூல் நிலையத்தை இம்மாதம் 17-ம் திகதியுடன் மூடிவிடும்படி எந்தவிதமான உத்தரவும் எமக்குப் பிறப்பிக்கப்படவில்லை. நூல் நிலையத்தை மூடிவிடும் எண்ணம் எதுவும் எமக்கில்லை''

பொதுசன நூலகத்தை 17-ம் தேதியுடன் மூடிவிட உத்தரவு என்ற தலைப்பில் 15-ம் தேதி 'ஈழநாடு' இதழில் வெளியான செய்தி பற்றி யாழ். ஆணையாளர் திரு. சி. வீ. கே. சிவஞானம் நேற்று வெளியிட்ட மறுப்பில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

''யாழ் பொதுசன நூல் நிலையத்தை இம்மாதம் 17-ம் திகதியுடன் மூடிவிடும்படி எந்தவிதமான உத்தரவும் எமக்கு பிறப்பிக்கப்படவில்லை என்பதையும், இந்நூல் நிலையத்திலிருக்கும் புத்தகங்களையும், தளபாடங்களையும் உடனடியாக அகற்றும்படியும் நாம் கேட்கப்படவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அத்தோடு நூல்நிலையத்தை மூடிவிடும் எண்ணம் எதுவும் எமக்கில்லையென்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.''

## மரண அறிவித்தல்

### நாகமணி பாலசுப்பிரமணியம்

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த நாகமணி பாலசுப்பிரமணியம் (வவுனியாக் கச்சேரி பிரதம லிகிதர்) அகால மரணமடைந்தார். ஈமக்கிரியை (17-5-85) வெள்ளிக்கிழமை பிற்பகல் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நணபர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3306

மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திரு. சதாசிவம் ஆசிரியர்

நெடுந்தீவு 11-ம் வட்டாரத்தை சேர்ந்த திரு. சதாசிவம் ஆசிரியர் அகாலமரணமானார். இவர் சின்னம்மாவின் அருமைக் கணவரும், விமலாதேவி, சிவகுமாரன் [மின்சாரசபை, வேலணை] கமலவதனி, மதிவதனமலர், பாஸ்கரகுமார், மகேஸ்வரகுமார், நிர்மலா ஆகியோரின் அன்புத் தந்தையும், சற்குலராணி, பத்மநாதன் ஆகியோரின் மாமனாரும் ஆவர். அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று 17 - 05 - 1985 வெள்ளிக்கிழமை பி. ப. 4 மணியளவில் நெடுந்தீவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்: ச. சிவகுமாரன், மகன். 3307

## மரண அறிவித்தல்

### திரு. P. J. சோமசுந்தரம்

காலஞ்சென்ற திரு. திருமதி சோமசுந்தரத்தின் மகனும், காலஞ்சென்ற நவரட்னம் Hunt, அமிர்தம் ஆகியோரின் மருமகனுமான திரு. P. J சோமசுந்தரம் அகால மரணமானார் இவர் அனுராதபுரம் C. G. R. accounts chief clerk ஆக கடமையாற்றியவரும், சண்டிலிப்பாய் 'கலாபவனம்' Flora நலமாவின் அன்புக்கணவரும், கிளாரன்ஸ் (Air Lanka) வின்ஸ்சன்ட் சுவிட்ஸ்லாந்து) சாந்தா ஆகியோரின் அருமை தந்தையும் குமாரகுலசிங்கம், திருமதி ராஜரட்னம், எஸ்தர், துரைரட்டனம், குணரட்னம் ஆகியோரின் சகோதரரும், செல்வநாயகம், குணராஜா, செல்வராஜா, ஜெயராஜா, ரேஸ் Dan Forth மகள் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். மரணச் சடங்குகள் விபரம் பின் அறிவிக்கப்படும். 3299

## வில்பத்து..,

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் தேடுதல் வேட்டை நடைபெறும் அதேவேளை, இந்தச்சம்பவத்துக்கு காரணமானவர்கள் இன்னமும் வில்பத்து பகுதிகளிலேயே மறைந்திருக்கிறார்கள் என்று நம்பப்படுவதாக உத்தியோகபூர்வமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ரா)

## எனதுகணவர்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

9-30 மணிக்கு வீட்டிலிருந்தோம். எங்களுக்கும் 3 பிள்ளைகள் உண்டு. அப்போது என் கணவன் புத்தகம் படித்துக்கொண்டிருந்தார். எங்கள் வீட்டுக்கு எதிரில் உள்ள ரயில் பாதையில் ஆட்கள் நடமாடும் சத்தம் கேட்டது. என் கணவர் யன்னலருகில் சென்று பார்த்தார். சீருடை அணிந்த சுமார் 100 பேர் ரயில் பாதையில் நின்றனர். கணவர் உடனே வீட்டு 'லைட்டை' அணைத்துவிட்டார். தன்னுடன் வரவேண்டாம் என்றும், சத்தம் போடாமல் இருக்கும்படியும் கணவர் சொன்னார். பின் அவரும் அங்குதான் நின்றார்.

''சீருடை அணிந்தவர்கள் எங்கள் கேற்றைத் தட்டினார்கள் அது பூட்டப்பட்டிருந்தது. பின் வேலித் தகரத்தைப் பிடுங்கிவிட்டு, முற்றத்திற்கு வந்து ஹோல் கதவை இடித்து உடைத்தார்கள். அப்போது 'ஆபத்து சுடப்போகிறார்கள் வெளிக்கிடு' என்று கூறிக் கொண்டு என்னை இழுத்துக் கொண்டு போனார். வெளியில் இருட்டாகஇருந்தது பக்கத்து வீட்டு கம்பிவேலியால்குனிந்து சென்று மாமரத்திற்குக் கீழ் நின்றோம்.

### கணவர் விழுந்தார்

''அப்போது வெடிச் சத்தம் கேட்டது. என் கணவர் துடிதுடித்து விழுந்தார் நான் 'ஐயோ என்கணவனைச் சுட்டுப் போட்டார்கள்' என்று குளறினேன். அப்போது சீருடை அணிந்தவர்கள் தமிழில் 'தங்கச்சி தங்கச்சி கிட்டவாங்கோ' என்று அழைத்தார்கள். நான் அவ்விடம் போகவில்லை. பின் அவர்கள் அடுத்த வீட்டுக்கம்பி வேலியை அறுத்து உள்ளே வந்து, அந்த வீட்டு கதவு யன்னல்களை எல்லாம் உடைத்தார்கள்.

### தண்ணீர் கேட்டார்

''அந்நேரம் என் கணவர் 'தண்ணீர் தண்ணீர் என்று கெஞ்சிக் கேட்டார். நான்வீட்டிற்கு ஓடிச்சென்று தண்ணீர் கொண்டுவரப்போனேன் சீருடைஅணிர்தவர்கள் என்னைப் போகவிடவில்லை. மறித்து தடுத்தார்கள். என் கணவரின் வாய்க்குள் எதனையோ அவர்கள் ஊற்றுவதைக் கண்டேன்.

'தங்கச்சி ஒன்றும் யோசிக்க வேணும். இது சின்னகாயம் என்று அவர்கள்சொன்னார்கள் நாங்களே மருந்துகட்டி விடுகிறோம் என்றும் சொன்னார்கள்

''கணவனுக்குகிட்ட என்னை அவர்கள் போகவிடவில்லை என்கணவனுக்கு என்ன நடந்தது? என்று அவர்களிடம் கெஞ்சிகேட்டேன். முழங்காலில் நின்று அவர்களை ''என்னை ஒன்றும் தொந்தரவு செய்ய வேண்டாம் 3 பிள்ளைக்கு தாய் என்னைவிட்டுவிடுங்கள்'' என்று கெஞ்சினேன்; மன்றாடினேன்

''ஒன்றுக்கும்பயப்படவேண்டாம். நாங்கள் பார்த்துக் கொள்வோம். காலையில் ஆஸ்பத்திரிக்குக்கொண்டுபோகலாம்'' என்றார்கள்.

''பின்னர் கண்டி வீதிக்கு செல்ல வழிஎது என்று சீருடையணிந்தவர்கள் கேட்டார்கள். நான் வழியைக் காட்டினேன். அவர்கள் சென்றுவிட்டார்கள்

''மறுநாள் காலை என் கணவனின் சகோதரன் வந்து கணவனின் சடலத்தை யாழ் ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றார்'.

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு தீர்ப்பு வழங்குவது ஒத்திப்போடப்பட்டுள்ளது. [க]

## யேசுதாசன் பலி

[சுண்டுக்குளி]

யாழ் உள்நாட்டு வியாபார பொறுப்பதிகாரி எஸ். யேசுதாசன் நேற்று முன் தினம் நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவானுக்குச் சென்று கொண்டிருந்த படகில் பிரயாணம் செய்யும்போது தாக்குதலுக்குள்ளாகி மரணமானார்.

45வயதுடைய இவர் '1984ம் ஆண்டின் அதிசிறந்த அலுவலராக' வர்த்தக கப்பற்றுறை அமைச்சர் திரு. எம். எஸ். அமரசிறி அவர்களினால் தெரிவு செய்யப்பட்டு ஜனாதிபதி விருதும் அண்மையில் இவருக்கு வழங்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

விடுமுறையைக் கழித்து விட்டு தமது சொந்த இடமான நெடுந்தீவிலிருந்து வந்த போதே அவர் இக்கோரச்சம்பவத்துக்குள்ளானார். (கி)

இவர் அணிந்திருந்த நீளக் கால்சட்டைக்குள் 24 ஆயிரம் ரூபா ரொக்கப்பணம் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதனை புங்குடுதீவு கிராம சேவையாளர் எடுத்து, மரணவிசாரணை நடத்திய மேலதிக நீதவான் கே. பி. எஸ். வரதராசா முன்னிலையில் சமர்ப்பித்து பின்னர் இறந்தவரின் மகனிடம் கொடுத்தார். (மா)

## பிரேதச்சாலையில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வீடாகவே காட்சியளித்தது.

ஒவ்வொரு சடலமும் பாய்களால் சுற்றிக் கட்டப்பட்டிருந்தது.

ஒரு பெண்குழந்தை உட்பட 13 பெண்களின் சடலங்களும், 18 ஆண்களின் சடலங்களும் இதற்குள் அடங்கும்.

படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தவர்களுள் மேலும் இருவர் மரணமானதைத் தொடர்ந்து இறந்தோர் தொகை 34ஆக அதிகரித்துள்ளது.

யாழ். ஆஸ்பத்திரியில் ஏற்கனவே நேற்று முன்தினம் மரணமான மூன்று வயதுள்ள பெண் குழந்தையின் சடலம் அவரது தந்தையாரால் எடுத்துச்செல்லப்பட்டது தெரிந்ததே.

மரணமானவர்களின் சடலங்கள் யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

இச்சடலங்களுள் 19 பேரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவர்களின் விபரம் வருமாறு;-

பொ. நாகேந்திரம் (32-வயது) நெடுந்தீவு, மு. மணிவண்ணன் (15-வயது) நெடுந்தீவு, ஐ. கின்னையா 35-வயது) குருநகர், அ. குசலகுமாரி (28-வயது) வடலியடைப்பு, பண்டத்தரிப்பு, அ. அனுசூயா (23-வயது) பண்டத்தரிப்பு, செல்வி ப. நிமிலி (18 வயது), ப. மரியம்மா 38-வயது), ப. யோகராசா, நிர்மலாதேவி பசுபதி (20-வயது), க. சதாசிவம் (61-வயது), ப. சொர்ணம்மா, சடையர் கோவிந்தன் (44-வயது) (இ.போ.ச காப்பாளர்) ஞா. தேவசகாயம்பிள்ளை (42 வயது], சி தில்லைநாதன் (38 வயது-ஊர்காவற்றுறை), இ. கனகலிங்கம் (34 வயது) செ. அந்தோனிப்பிள்ளை (45வயது), ந. கந்தையா (இ போ. ச. சாரதி-44 வயது), சின்னவன் அந்தோனி (65 வயது), எஸ். யேசுதாசன் (46 வயது- யாழ்ப்பாணம்].

இறந்தவர்களில் அதிகமானோர் நெடுந்தீவைச் சேர்ந்தவர்கள்.

### மேலும் இருவர் மரணம்

நெடுந்தீவுக் கடலில் பிரயாணிகள் படகில்இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் பலியானவர்களின்தொகைமேலும் இருவரால் அதிகரித்துள்ளது.

யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவந்த யோகன் (14 வயது) யாழ்ப்பாணம், யேசுநாயகம் (மயிலிட்டி) ஆகிய இருவருமே நேற்றுக் காலை மரணமானவர்களாகும்.

## 'ரெலோ'...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தாக்குதல்களை முற்றாக நிராகரிக்கின்ற நாம், இவ்வாறான தாக்குதல்கள் சர்வதேச ரீதியில் எமது விடுதலைப் போராட்டம் பற்றிய தவறான கண்ணோட்டத்தையே ஏற்படுத்தும என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டுள்ளோம் என்றும் நிச்சயமாக எமது போராட்டம் சிங்கள அரசாங்கத்துக்கு எதிரானது என்றும் சிங்கள மக்களுக்கு எதிரானது அல்ல என்றும் மேற்படி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமாகத் துண்டுப் பிரசுரமொன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

### சென்னையில் தகவல்

இதேநேரத்தில், தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் திரு. சிறீசபாரத்தினம் நேற்று சென்னையில் இதே மாதிரியான அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளார். (மா)

## தென்பகுதி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பாட்டுடன் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் சில அரச ஊழியர்கள் உயிர் இழந்துள்ளதாகவும் எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. எனவே தென் பிரதேசங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்குஉயிர் பாதுகாப்பு அளிக்குமாறு ஜனாதிபதியை பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக்குழு கேட்டுள்ளது.'' (க)

## யாழ் நகரில் ..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

காணப்பட்டது. வாகனப் போக்குவரத்தும் குறைந்திருந்தது

சில தேநீர்க்கடைகள், மருந்துக்கடைகள் மட்டும் ஒற்றைக் கதவில் திறந்திருந்தன

வர்த்தகர்கள் கடத்தப்படுவதை ஆட்சேபித்து சில கடைகளில் சுலோக அட்டைகள் தொங்கவிடப்பட்டிருந்தன.

கடத்தப்பட்ட வர்த்தகர்களில் திரு. எஸ். ஏ. செல்லத்துரை மட்டும் விடுதலை செய்யப்படவில்லை. (க)

## லண்டன் ஏடு ..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பட்ட அரச ஊழியர்களில் சுமார் இருபத்தெட்டு பேர் உடன் கொல்லப்பட்டார்கள் என்றும் இவர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன என்றும் ''டெய்லி டெலிகிராப்'' என்னும் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. [ரா]

## பாதுகாப்பு..-

(1ம பக்கத் தொடர்ச்சி)

கிருந்து தப்பியோடிய பல தீவிரவாதிகள் தேடப்பட்டு வருகின்றார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலின் பின்பு ஏராளமான வெடிமருந்துகளும் முகாம் அமைப்பதற்கான தளபாடங்களும் கைப்பற்றப்பட்டதாகவும் அச்செய்தி தெரிவித்தது. (ரா)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி (8-ம் இலக்க அச்சகத்தில் 1985ம் ஆண்டு மே மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu P.O. Box 49 Telegram Eelanadu, Telephone: 22389-24126